RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-74 | 20 மார்ச் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## சுனிதா வில்லியம்ஸுக்கு சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பாராட்டு



சென்னை, மார்ச்.20

விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸுக்கு தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சட்டப்பேரவையில் முதல்வர், "விண்வெளியில், சர்வதேச விண்வெளி மையத்தில் (ஐஎஸ்எஸ்) 287 நாட்களாக தங்கியிருந்த இந்திய வம்சாவெளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி வீரர் வில்மோர் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பூமிக்குத் திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது. அவர்களின் உடல் நிலை பாதிக்கப்படும் என்றும், உயிருக்கு ஆபத்து என்றும் பல்வேறு தகவல்கள் வெளியாகின. இருந்தும், அந்த விண்வெளிமையத்தில் அவர்கள் அயராது தங்கள் பணிகளை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் ஃபால்கன் 9 ராக்கெட்டுடன் டிராகன் விண்களம் அனுப்பப்பட்டு சர்வதேச விண்வெளி மையத்தைச் சென்றடைந்தது. இதனையடுத்து சுனிதா, வில்மோர் உள்ளிட்டோருடன் மேலும் 2 வீரர்களும் ஃப்ளோரிடா அருகே கடலில் பத்திரமாக இறங்கினர். அவர்கள் பத்திரமாக பூமிக்கு வந்தடைந்த செய்தி நம் அனைவரையும் மகிழ்ச்சியடையச் செய்துள்ளது. இத்தருணத்தில் சுனிதா வில்லியம்ஸுக்கும் அவரை பத்திரமாக பூமிக்கு கொண்டு வர உதவிய அனைவருக்கும் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று கூறினார்.

முன்னதாக, அமெரிக்காவின் போயிங் நிறுவனம் தயாரித்த ஸ்டார்லைனர் என்ற புதிய விண்கலத்தில் இந்திய வம்சாவளியை சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், பேரி வில்மோர் கடந்த ஆண்டு ஜூன் 5ம் தேதி ஐஎஸ்எஸ் நிலையத்துக்கு சென்றனர்.

இவர்கள் 8 நாட்கள் ஆய்வு செய்துவிட்டு பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் ஸ்டார்லைனர் விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு இருவரும் பூமிக்கு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டது. இந்நிலையில் 9 மாதங்களுக்குப் பிறகு, இந்திய நேரப்படி புதன்கிழமை அதிகாலை 3.27 மணிக்கு புளோரிடா கடலில் டிராகன் ஸ்பிளாஷ் டவுன் ஆனது. சுனிதா மற்றும் வில்மோருடன் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் இருவரும் டிராகன் விண்கலம் மூலம் பூமி திரும்பியுள்ளனர். அவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்ட தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியும் எக்ஸ் தளத்தில் வாழ்த்தைப் பகிர்ந்திருந்தார். இந்நிலையில், சுனிதா வில்லியம்ஸுக்கு தமிழக சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

## மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு நாடாளுமன்ற வளாகத்தில் எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்




புதுடெல்லி, மார்ச்.20

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை மேற்கொள்ள எதிர்ப்பு தெரிவித்து திமுக, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று (மார்ச் 19) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், திமுக எம்பிக்கள் கனிமொழி, திருச்சி சிவா, தயாநிதி மாறன், கனிமொழி என்விஎன் சோமு, பி. வில்சன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எம்பி தொல் திருமாவளவன், காங்கிரஸ் எம்பி ஜோதிமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வஞ்சிக்காதே வஞ்சிக்காதே தென் மாநிலங்களை வஞ்சிக்காதே என்றும், மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளைக் குறைக்காதே என்றும் அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இதனிடையே, இந்த விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் எம்.பி ஜோதிமணி மக்களவையில் விதி எண் 377ன் கீழ் தனது கருத்தைப் பதிவு செய்தார். அவர் தனது உரையில், "நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு (Delimitation) நடவடிக்கையை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இந்த நடவடிக்கை தமிழகத்தை போன்ற தென் மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை வெகுவாகக் குறைக்கும் அபாயத்தை உருவாக்குகிறது.

கடந்த பல பத்தாண்டுகளாக தமிழகமும் மற்ற தென் மாநிலங்களும் பொறுப்பு மற்றும் தொலைநோக்குடன் செயல்பட்டு, மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை செயல்படுத்தி வந்துள்ளன. இது ஒன்றிய அரசே ஊக்குவித்த ஒரு நடவடிக்கையாகும். ஆனால் இன்று, இந்த வெற்றிக்காக நாங்கள் தண்டிக்கப்படுகிறோம்.

ஒன்றிய உள்துறை அமைச்சர் தென் மாநிலங்களின் தொகுதிகள் குறையாது எனக் கூறுகிறார். ஆனால், மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செயல்படுத்தப்பட்டால், மக்கள் தொகையை கட்டுப்படுத்தத் தவறிய மாநிலங்கள் அதிக அரசியல் அதிகாரத்தைப் பெறும். இதனால், தமிழகத்தை போன்ற மாநிலங்களின் ஜனநாயக உரிமைகள், அதிகாரம் பறிக்கப்படும். இதன் விளைவாக, தமிழகம் மட்டுமல்ல, தென் இந்தியாவின் ஒட்டுமொத்த குரலும் வலுவிழந்துவிடும்.

எமது மாநிலங்களின் பங்களிப்பு பொருளாதாரம், சமூகம், பண்பாடு உள்ளிட்ட அனைத்து தளங்களிலும் மிகப்பெரியது என்றாலும், தேசிய அளவில் முடிவெடுக்கும் இடங்களில் எங்களுக்குரிய பிரதிநிதித்துவம் குறைக்கப்படும். இதைப் பார்த்துக்கொண்டு தென் மாநிலங்கள் அமைதியாக இருக்க முடியாது. எங்கள் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் எந்த முயற்சியையும் நாங்கள் ஏற்க மாட்டோம்.

எனவே, ஒன்றிய அரசு உடனடியாக தகுந்த விளக்கம் அளித்து, தொகுதி மறுசீரமைப்பு எந்த அடிப்படையில் நடக்கிறது என்பதை தெளிவுபடுத்த வேண்டும். தமிழகம் மற்றும் தென் மாநிலங்கள் இரண்டாம்தர அரசியல் அமைப்பிற்கு தள்ளப் படாது என்று உறுதியளிக்க வேண்டும்." என்று கோரிக்கை விடுத்தார்.

## தொகுதி மறுவரையறை குறித்த கூட்டம் 3 மாநில முதல்வர்கள் பங்கேற்பதாக திமுக தகவல்



சென்னை, மார்ச்.20

தொகுதி மறுவரையறை குறித்த கலந்தாய்வு கூட்டத்தில் 3 மாநில முதல்வர்கள் பங்கேற்பதாக திமுக மருத்துவர் அணி செயலாளரும் எம்எல்ஏவுமான நா.எழிலன் தெரிவித்தார்.

சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள திமுக தலைமையகத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தொகுதி மறுசீரமைப்பு குறித்து கலந்தாய்வு கூட்டம் சென்னையில் மார்ச் 22ம் தேதி நடைபெற உள்ளது.

இதில், கேரளா முதல்வர் பினராயி விஜயன், கோவிந்த், பினாய் விஷ்வம், கும்பகடி சுதாகரன், கேரள காங்கிரஸ் பி.ஜே.ஜோசப், மணி, எம்.கே.பிரேம சந்திரன், ஆந்திராவிலிருந்து மிதுன் ரெட்டி, தெலங்கானாவின் முதல்வர் ரேவந்த் ரெட்டி, கே.டி.ராமராவ், வினோத் குமார் எம்.பி., பஞ்சாப் முதல்வர் பகவந்த் மன், கர்நாடகாவிலிருந்து துணை முதல்வர் சிவகுமார் உள்ளிட்ட பலர் பங்கேற்க உள்ளனர்.

உத்தரப்பிரதேசத்தின் இடங்கள் 80ல் இருந்து 143 ஆகவும், பிஹாரில் 40ல் இருந்து 79ஆகவும், மத்தியபிரதேசத்தில் 29ல் இருந்து 52 ஆகவும் அதிகரிக்கக் கூடும். ஆனால், தமிழகம், கேரளா, ஆந்திரா, தெலங்கானா உள்ளிட்ட தென் மாநிலங்களில் தொகுதி எண்ணிக்கை அதே அளவில் குறைவாகத்தான் இருக்கும்.

உரிமைக்கான குரலை நாடாளுமன்றத்தில் ஒலிக்க நமது பிரதிநிதித்துவம் இருந்தால் தான் முடியும். இவற்றை உணர்ந்துதான் முதல்வர் களம் அமைக்கிறார்; நியாயம் கேட்கிறார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அவுரங்கசீப் கல்லறையை இடித்து அகற்ற வேண்டிய தேவை என்ன? வேல்முருகன் கேள்வி




சென்னை, மார்ச்.20

நாட்டில் வேலையில்லா திண்டாட்டம், பணவீக்கம், மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தலைவிரித்தாடி வரும் நிலையில், அவுரங்கசீப் கல்லறையை இடித்து அகற்ற வேண்டிய தேவை என்ன இருக்கிறது? என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இஸ்லாமியர்களை இழிவு படுத்துவது, தாக்குவது, கொலை செய்வது போன்றவற்றையே தனது முழு நேர பணியாக கொண்டு காவி பயங்கரவாத கும்பல் நாடு முழுவதும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

பாஜக, ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட இந்து மத வெறியர்களால் பாபர் மசூதி இடிக்கப்பட்டு ஆண்டுகள் பல ஓடி விட்டன. இருந்தும் அன்று இசுலாமிய மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட அச்சம், தற்போது முன்பைக் காட்டிலும் மேலோங்கியுள்ளது.

சமீபத்தில் சத்ரபதி சிவாஜி மகாராஜாவின் மகன் சத்ரபதி சாம்பாஜியின் வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து எடுக்கப்பட்ட சாவா என்ற இந்தி திரைப்படம் வெளியான பிறகு அவுரங்கசீப் கல்லறையை இடிக்க வேண்டும் என்ற கோரிக்கை தீவிரம் அடைந்திருக்கிறது. இக்கோரிக்கையை வலியுறுத்தி இந்து அமைப்புகளான விஷ்வ இந்து பரிஷத் மற்றும் பஜ்ரங் தளம் அமைப்புகள் மாநிலம் தழுவிய போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன.

குறிப்பாக, ஔரங்கசீப் கல்லறையை இடிப்பவர்களுக்கு ரூ.21 லட்சம் பரிசு வழங்கப்படும் என உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த இந்து அமைப்பு ஒன்று பகிரங்கமாக அறிவித்துள்ளது. இதற்கு பாஜக மத்திய அமைச்சர்களும், மகாராஷ்டிரா முதல்வரும் வெளிப்படையாகவே ஆதரவு தெரிவித்திருக்கின்றனர். இத்தகைய போக்கு சர்வாதிகாரத்தின் உச்சமாகும்.

பாசிச பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு இசுலாமிய மக்கள் மீதான கலவரங்களை திட்டமிட்டு நடத்தி வருகிறது. விநாயகர் சதுர்த்தி, இராம நவமி, ஹோலி போன்ற இந்து பண்டிகை நாட்களில் மசூதிகள் மீது தாக்குதல் நடத்துவது, இஸ்லாமிய மக்களை படுகொலை செய்வது என கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக பா.ஜ.க கலவர ஆட்சி நடத்தி வருகிறது. அதன் தொடர்ச்சி தான், அவுரங்கசீப் கல்லறை இடித்து அகற்றும் சதித்திட்டமே ஆகும்.

இக்கலவரங்கள் மூலம் பெரும்பான்மை இந்து மக்களிடம் இந்துமதவெறியைத் தூண்டிவிட்டு அவர்களை தங்கள் பக்கம் திரட்டிக்கொள்வது மட்டுமல்லாமல், இஸ்லாமியர்களை எந்த உரிமைகளும் அற்ற இரண்டாந்தர குடிமக்களாக மாற்ற விழைகின்றனர்.

நாட்டில் வேலையில்லா திண்டாட்டம், பணவீக்கம், மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தலைவிரித்தாடி வரும் நிலையில், அவுரங்கசீப் கல்லறையை இடித்து அகற்ற வேண்டிய தேவை என்ன இருக்கிறது?

அரசியல் ஒழுக்கமும் இல்லை; ஆன்மிக ஒழுக்கமும் இல்லாத பாஜக அரசு, இஸ்லாமிய மக்கள் மீது திட்டமிட்டு தாக்குதல்களை நடத்தி, அடுத்தடுத்து வரும் சட்டமன்ற தேர்தல்களை மூலமாக, இந்திய ஒன்றியத்தில் பல்வேறு மாநிலங்களை ஆட்சியை நிறுவி விடலாம் என எண்ணுகிறது.

எனவே, ஒன்றியத்தில் உள்ள இஸ்லாமியர்களை அச்சுறுத்துவதோடு, நாட்டின் மதசார்பின்மைக்கு எதிராக செயல்பட்டு வரும் பாஜக, ஆர்.எஸ்.எஸ் கும்பல்களுக்கு தக்க பதிலடி கொடுக்க, ஜனநாயக சக்திகள் ஒன்று திரள வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி அழைப்பு விடுக்கிறது." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழகத்தில் மார்ச் 22 வரை மழைக்கு வாய்ப்பு



சென்னை, மார்ச்.20

தமிழகத்தில் மார்ச் 22ம் தேதி வரை லேசான மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அம்மையத்தின் இயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்னிந்திய பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சி பகுதிகளில், கிழக்கு மற்றும் மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் தாக்கத்தால் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மார்ச் 22ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழகத்தில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் இயல்பை விட 35.6 37.4 டிகிரி பாரன்ஹீட் அதிகமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகரைப் பொருத்தவரை இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 93.295 டிகிரியை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 78.8 டிகிரி பாரன்ஹீட்டை ஒட்டியும் இருக்கக்கூடும்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் சாம்ராஜ் எஸ்டேட்டில் 5 செமீ மழை பதிவானது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## இலங்கை கடற்படையினரால் ராமேசுவரம் மீனவர்கள் 3 பேர் கைது வெளியுறவு துறை அமைச்சருக்கு முதல்வர் கடிதம்



ராமேசுவரம், மார்ச்.20

நெடுந்தீவு அருகே ராமேசுவரம் மீனவர்கள் 3 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, வெளியுறவுத் துறை அமைச்சருக்கு, முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

கச்சத்தீவில் உள்ள புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா நிறைவடைந்த நிலையில், நேற்று முன்தினம் ராமேசுவரம் மீனவர்கள் 500க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் கடலுக்குச் சென்றனர். கென்னடி என்பவரது விசைப்படகை இலங்கை கடற்படையினர் நெடுந்தீவு அருகே சிறைபிடித்தனர். எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாக கூறி மீனவர்கள் சங்கர், அர்ஜூனன், தர்ம முனியாண்டி ஆகியோரை கைது செய்தனர். பின்னர் மீனவர்கள் ஊர்க்காவல் துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதையடுத்து, ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் மீனவபிரதிநிதி பிரான்சிஸ் தலைமையில் மீனவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மீனவர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்தும், இலங்கை சிறைகளில் உள்ள மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும் புதன்கிழமை (இன்று) ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் முதல் 20 படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டு, 148 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தூதரக நடவடிக்கை: இதுதொடர்பாக, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: 2025ம் ஆண்டின் 3 மாதங்களுக்குள் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் 10வது சம்பவத்தை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். பாரம்பரிய மீன்பிடி பகுதியில் நமது மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்க வலுவான தூதரக முயற்சிகள் தேவை என்று பலமுறை நான் வலியுறுத்தி கேட்டுக் கொண்ட போதிலும், இதுபோன்ற கவலையளிக்கக்கூடிய சம்பவங்களின் எண்ணிக்கை தொய்வின்றி தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்கு மீன்பிடி தொழிலையே பெரிதும் நம்பியுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் அடிக்கடி இதுபோன்று சிறைபிடிக்கப்படுவதால், அவர்களது குடும்பத்தினர் வறுமையின் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, தமிழக மீனவர்கள் மேலும் கைது செய்யப்படாமல் தடுக்கவும், இலங்கை சிறைக் காவலில் வைக்கப்பட்டு உள்ள தமிழகத்தைச் சேர்ந்த 110 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்கவும் வலுவான தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

## மதுரை மாவட்டம் தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் சங்கமம் -நம்ம ஊரு திருவிழாவிற்கான கலைக் குழுக்கள் தேர்வு

மதுரை, மார்ச்.20

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத் துறை சார்பில் சென்னையில் பொங்கல் விழாவின்போது, தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலைகள், அயல் மாநில நாட்டுப்புறக் கலைகள், செவ்வியல் கலைகள் இடம் பெறும் வகையில் சென்னை நம்ம ஊரு திருவிழா சென்னை 18 இடங்களில் நடத்தப்பட்டு வருகிறது கடந்த ஆண்டு கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், சேலம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 8 இடங்களில் நம்ம ஊரு திருவிழா நடத்தப்பட்டது

இவ்வாண்டும் மேற்காண் 8 இடங்களிலும் இக்கலை திருவிழா நடத்தப்பட உள்ளது இவ்விழாவில் நிகழ்ச்சி நடத்த விரும்பும் கலைக்குழுக்களின் நிகழ்ச்சி பதிவு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மார்ச் 22 மற்றும் 23 ஆகிய நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மேற்கொள்ளப்பட உள்ளது நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், காளை ஆட்டம், மயிலாட்டம், பறையாட்டம், பம்பை கைச்சிலம்பாட்டம், இறை நடனம், துடும்பாட்டம், ஜிக்காட்டம், கிராமிய பாட்டு மற்றும் பல்சுவை நிகழ்ச்சி வழங்கும் கலைக்குழுக்கள் மார்ச் 22 சனிக்கிழமை அன்றும், தெருக்கூத்து, இசை நாடகம், நாடகம், கனியான் கூத்து, பொம்மலாட்டம், தோல்பாவைக் கூத்து, வில்லுப்பாட்டு, தேவராட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், கும்மி, கோலாட்டம், மரக்கால் ஆட்டம், பரதநாட்டியம், பழங்குடியினர் நடனம் நிகழ்ச்சி நடத்துவோர் மற்றும் இதர கலைக்குழுக்களின் நிகழ்ச்சிகள் மார்ச் 23 ஞாயிறு அன்றும் மதுரை மாவட்டத்தில் பசுமலை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் நிகழ்ச்சி பதிவுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

மாவட்ட அளவிலானத் தேர்வில் பங்கு பெற விரும்பும் கலைக் குழுக்கள் கலை பண்பாட்டுத் துறையின் இணையதளத்தில் (www.artandculture.tn.gov.in) வெளியிடப்பட்டுள்ள கூகுள் பார்ம் (Google Form) மூலம் மார்ச் 20 ஆம் தேதி மாலைக்குள் விண்ணப்பிக்கலாம் அல்லது மதுரை மாவட்டத்திற்கான பொறுப்பாளர் .அ.ரமிசா பேகம் 9500008204 என்ற எண்ணில் தொடர்புக் கொண்டு பதிவு செய்துக்கொள்ளலாம். கலை பண்பாட்டுத் துறை அளித்துள்ள இந்த வாய்ப்பினை அனைத்து நிகழ்த்துக் கலைஞர்களும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர்மா. சங்கீதா, தெரிவித்துள்ளார்.

## பெருங்களத்தூர் பகுதி சார்பில் தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிறந்தநாளை முன்னிட்டு கட்சி கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கல்



பெருங்களத்தூர் மார்ச் 20

பெருங்களத்தூர் பகுதி சார்பில் தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு கட்சி கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது

தாம்பரம் அடுத்த பெருங்களத்தூர் பகுதி சார்பில் தேமுதிக கழக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் அனகை முருகேசன், மாவட்ட துணைச் செயலாளர் மா.செழியன் அவர்களின் அறுவுறுத்தலின்படி பெருங்களத்தூர் பகுதி கழக செயலாளர் பி.அருள் தலைமையில் 59வது வார்டு செயலாளர் பி.அரவிந்தன் ஏற்பாட்டில் கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட மகளிர் அணி செயலாளர் பாத்திமா ஸ்டெல்லா கலந்துகொண்டு தேமுதிக கட்சி கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் விஜய பாரதி, கணேஷ், தேவராஜ், சுரேஷ், ஆசிர்வாதம், சுகர் திணி, குப்புசாமி, பரசுராம், பழனி, சீனிவாசன், நரசிம்மன், பாலகுமார், சதீஷ், ராஜ்குமார், கலைவாணி, வினோத்குமார், கோகுல், குடந்தை ஆர்.துரை, ஏ.என்.ஆர் ராஜாங்கம் மற்றும் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

## கல்லூரிகளுக்கு இடையிலான திறன் வளர் போட்டியில் சாம்பியன் கோப்பை வென்ற அழகப்பா அரசு கலைக் கல்லூரி மாணவர்கள்




காரைக்குடி மார்ச் 20

அழகப்பா அரசு கலைக் கல்லூரி கணினி அறிவியல் துறை மாணவர்கள் சாம்பியன் கோப்பை வென்றனர்.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தென்மண்டல அளவிலான கல்லூரிகளுக்கு இடையில்,பைட்ஸ்(Bytes) 2025 என்ற தலைப்பில் பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. இதில் கலந்துகொண்ட சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் கணினி அறிவியல் துறையைச் சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்ற அனைத்துப் போட்டிகளிலும் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தி முதல் பரிசு பெற்று, அனைத்து கல்லூரிகளுக்கான ஒட்டுமொத்த சாம்பியன் கோப்பையையும் வென்றனர். அதுபோல மதுரை யாதவா கல்லூரியில் பீட்ஸ்(Beats) 2025 என்ற தலைப்பில் நடைபெற்ற ஆய்வு கட்டுரை வாசித்தல் , ப்ரோக்ராம் டெவெலப்மென்ட் போன்ற பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளை வென்றனர். பரிசு பெற்ற மாணவிகள் மதுமிதா, ஸ்ரீதக்சா, மற்றும் மாணவர் மதன், ஸ்ரீராம், மணிவேல், சாய் கிருஷ்ணன், சக்தி கணேஷ்,ஆகியோரை கல்லூரியின் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி , கணினி அறிவியல் துறைத் தலைவர் கே சி சந்திரசேகரன், கௌரவ விரிவுரையாளர் ஆனந்தநாயகி, மற்றும் பேராசிரியர்களும் பாராட்டினர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை இருப்புப்பாதை காவல் நிலைய சார்பு ஆய்வாளர்கள் வசந்தி, தனுஷ்கோடி மற்றும் மயில்முருகன் தலைமையில் காவலர்கள் மானாமதுரை சந்திப்பு இரயில் நிலைய நடைமேடை எண்3ல் வண்டி எண் (22536)பனாரஸ் மண்டபம் வரை செல்லும் வாராந்திர விரைவு வண்டியில் பின்புறம் உள்ள பொது பெட்டியில் தீடீர் சோதனை செய்தபோது சாக்கு மூட்டையில் கேட்பாரற்று கிடந்த தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 20 கிலோ எடையுள்ள பான் மசாலா, குட்கா மற்றும் புகையிலை பொருட்களை நேற்று கைப்பற்றினார் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, கிருஷ்ணன்கோவில் நியாயவிலைக்கடையினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

## தேவகோட்டை வருவாய் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்

காரைக்குடி மார்ச் 20

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி கண்ணதாசன் மணிமண்டபத்தில் தேவகோட்டை வட்டளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் நலன் காத்து வருகிறார்கள். அதன்படி, விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டும், வேளாண் தொழிலை உழவர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தேவையான அனைத்து வசதிகளுடன் மேற்கொள்ளும் பொருட்டும், பிரதி மாதந்தோறும் விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாதத்தில் கடைசி வெள்ளிக்கிழமை அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

அதனை, மேலும் விரிவு படுத்திடும் பொருட்டு, விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில், வருவாய் கோட்டளவில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்திடும் பொருட்டு, மாதத்திற்கு இருமுறை வருவாய் கோட்ட அளவில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம் தேவகோட்டை வருவாய் கோட்ட அளவில், காரைக்குடி பகுதியில் இக்கூட்டமானது சிறப்பாக நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில், விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகளின் மீது



மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், புதிய கோரிக்கைகள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்படுகிறது.

குறிப்பாக, விவசாய நிலங்களை வன விலங்குகள் சேதப்படுத்தாமல் பாதுகாத்திடவும், நீர் நிலையிலுள்ள ஆக்கிரமிப்புக்களை உடனடியாக அகற்றி, தேவையான நிலங்களில் தடுப்பணைகள் ஏற்படுத்தி, நிலத்தடி நீர் மட்டத்தினை பாதுகாத்திடவும், விவசாயிகள் அரசின் திட்டங்களின் பயன்களை முழுமையாக பெற்றிடவும், தேவையான சான்றிதழ்களை வழங்கிடவும், விவசாயிகளுக்கான மின் விநியோகங்களை சீரான முறையில் வழங்கிடவும், வங்கிகளின் மூலம் கடனுதவிகள் வழங்கி வேளாண் சார்ந்த புதிய தொழில் தொடங்கிட உறுதுணையாக இருந்திடவும், கடனுதவிக்குரிய மானியத்தொகையினை தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கிடவும், தேவையான உரங்களை இருப்பு வைத்திடவும், விவசாயிகளின் கோரிக்கைகளுக்கிணங்க, துறை சார்ந்த அலுவலர்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இக்கூட்டத்தின் வாயிலாக விவசாயிகள் தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு கோரிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி, அரசின் திட்டங்கள் விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதிசெய்திட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித்,இ. தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, விவசாயிகளின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து, துறை சார்ந்த அலுவலர்கள் உரிய விபரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் மீது உடனடி தீர்வு காணும் பொருட்டு, உரிய களஆய்வுகளும் மேற்கொண்டு, அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்கும்படியும் மாவட்ட ஆட்சியர் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் என்.என்.552 கண்ணங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் 01 விவசாயிக்கு ரூ.12,26,671/ மதிப்பீட்டிலான டிராக்டர் கல்டிவேட்டர் ட்ரெய்லரினையும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் 202425ன் கீழ் 03 விவசாயிகளுக்கு ரூ.33,000/ மதிப்பீட்டிலான பரப்பு விரிவாக்கம் தென்னை, காய்கறி சாகுபடி ஆகியவைகளுக்கான இடுபொருட்களையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 05 விவசாயிகளுக்கு முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் மற்றும் மாநில விவசாய மேம்பாட்டு திட்டம் ஆகியவைகளின் கீழ் ரூ.6,832/ மதிப்பீட்டிலான பல்வேறு வகையான வேளாண் இடுபொருட்களையும் என ஆக மொத்தம் 09 விவசாயிகளுக்கு ரூ.12,66,503/மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

முன்னதாக, வேளாண்மைத் துறையின் சார்பில் அமைக்கப் பட்டிருந்த செயல்விளக்க கண்காட்சியினை மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித் பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் உமா மகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) தனலெட்சுமி, துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் உட்பட பல்வேறு துறையை சார்ந்த முதன்மை அலுவலர்கள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கையில் கண்ணீர் மல்க ஆட்சியரிடம் மனு அளித்த தாய்
### உடனடியாக தீர்வு கண்டுபிடித்த தனியார் தொலைக்காட்சி செய்தியாளர்

சிவகங்கை மார்ச்.20

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுகா நாச்சியார்புரம் அருகேவுள்ளது வலையபட்டி கிராமம். இந்த கிராமத்தை சேர்ந்தவர்கள் வெள்ளைக்கண்ணு, நாச்சம்மை தம்பதியர். இவர்களுக்கு மூன்று மகள்களும் ஒரே ஒரு மகனும் உள்ள நிலையில் மகள்கள் அனைவருக்கும் திருமணமான நிலையில் மூன்றாவது பிள்ளையான பாலசுப்ரமணியன் மட்டும் வேலை நிமித்தமாக கடந்த 2021 ஆம் ஆண்டு சிங்கப்பூர் நாட்டிற்கு வேலைக்கு சென்றுள்ளார். கடந்த 6 மாத காலம் பெற்றோருக்கு மாத, மாதம் பணம் அனுப்பியதுடன் தொடர்பில் இருந்துள்ளார். அதன் பின் அவரிடம் இருந்து எந்த செல்போன் அழைப்புகளும் இல்லாமல் இருந்ததுடன் அவர் உபயோகித்துவந்த எண்ணிற்கு தொடர்பு கொண்டால் எந்த அழைப்பும் ஏற்கப்படாமலும் இருந்துள்ளது. இதனை தொடர்ந்து அவருடன் பணிபுரிந்த நபர்களை தொடர்பு கொண்டும் பாலசுப்ரமணியன் குறித்த எந்த தகவலும் கிடைக்கவில்லை என கூறப்படும் நிலையில் தந்தை வெள்ளைக்கண்ணு உடல் நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தால் மூதாட்டி நாச்சம்மை மட்டும் தனது








உறவினர்களுடன் சிவகங்கை ஆட்சியர் அலுவலகம் வந்து கண்ணீர் மல்க ஆட்சியரின் நேர்முக உதவியாளரை சந்தித்து தனது மகனை கண்டுபிடித்து தரக்கோரி கண்ணீர் மல்க கோரிக்கை மனுவை நேற்று அளித்தார்.

இதனை அறிந்து அங்கு செய்தியாளர்கள் செய்தி சேகரிக்க சென்ற நிலையில் அங்கிருந்த தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் சிதம்பரநாதன் என்பவர் மூதாட்டியிடம் அவரின் மகன் குறித்த அடையாளங்களை பெற்றுக்கொண்டு சிங்கப்பூரில் வேலை செய்து வரும் அவரது நண்பரான இராமநாதபுரம் மாவட்டம் திருச்சுழி வட்டம் நரிக்குடி ஒன்றியம் டி.கடம்பன்குளம் கிராமத்தைச் சேர்ந்த (தற்போது இருப்பு சிவகங்கை மாவட்டம்) முனியசாமி மகன் மற்றும் மானாமதுரை மாலை தந்தி இணை ஆசிரியர் கரு.சந்துரு தம்பி கேப்டன் வசந்த் என்பவரை தொடர்பு கொண்டு பாலசுப்ரமணியன் குறித்த தகவல்களை வழங்கிய நிலையில் சுமார் 30 நிமிடத்தில் பாலசுப்ரமணியன் இருப்பிடத்தை கண்டுபிடித்து உடனடியாக அவரது செல்போன் எண்ணையும் பெற்று தாயான நாச்சம்மையுடன் பேசவும் வைத்தனர். மகன் உயிருடன் இருக்கும் விசயத்தை அறிந்த தாய் நாச்சம்மை ஆனந்த கண்ணீர் சிந்தியதுடன் மகனை உடனடியாக சொந்த ஊர் வர வேண்டுகோள் விடுத்தார். இந்த சம்பவம் அவ்விடத்தில் இருந்தவர்களை மெய்சிலிர்க்க வைத்ததோடு அல்லாமல் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் பாலசுப்ரமணியன் சிங்கப்பூரிலேயே காதல் திருமணம் செய்து கொண்டதாகவும் அது குறித்து தெரிந்தால் பெற்றோர்கள் வருத்தப்படுவார்கள் என்பதால் இத்தனை காலம் பெற்றோருடன் தொடர்பில்லாமல் இருந்ததும் தெரியவந்துள்ளது.

# வேலூர், குடியாத்தம், வேப்பூரில் பட்டா மாறுதலுக்காக ரூ.10,000 லஞ்சம் பெற்ற வி.ஏ.ஓ.வை சுற்றி வளைத்த லஞ்ச ஒழிப்பு துறை

வேலூர், மார்ச்.20

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலூகா, வேப்பூரில், விவசாயி விவசாய நிலத்திற்கு பட்டா மாறுதலுக்காக ரூ.10,000 லஞ்சம் பெற்ற வி.ஏ.ஓ. கோபி என்பவரை லஞ்ச ஒழிப்பு போலீசார் சுற்றி வளைத்து கைது செய்தனர். விவசாயி நிஜாமுதீன் பட்டா

மாறுதல் கோரி விண்ணப்பித்தார். இதற்காக (மார்ச் 18 செவ்வாய்க்கிழமை)



லஞ்சம் வாங்கிய போது

மறைந்திருந்த வேலூர் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் கையும், களவுமாக கோபிநாத்தை சுற்றி வளைத்து கைது செய்து அவரிடம் இருந்த ரசாயனம் தடவிய பத்தாயிரத்தை பறிமுதல் செய்தனர்.

நீண்ட மற்றும் பல மாதங்களுக்கு பிறகு லஞ்சம் குறித்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துறையினரை, பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டி வருகின்றனர்.



முதலமைச்சரின் விரிவான மருத்துவ ஒப்பீட்டு திட்டத்தின் ஒருங்கிணைந்த ஆயிஷ்மான் பாரத் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கியத் திட்டம் தேவாரம் பேரூராட்சியில் நடைபெற்றது

# பெரியகுளம்வடகரை வத்தந்தோப்பில் பகவதியம்மன் உற்சவ திருவிழா



பெரியகுளம், மார்ச்.20

தேனி மாவட்டம் பெரியகுளம் வடகரை வத்தந்தோப்பில் இருக்கும் அருள்மிகு ஸ்ரீ பகவதியம்மன் உற்சவ திருவிழாவை முன்னிட்டு ஊர் பொது மக்கள் அனைவரும் கலந்துகொண்டனர். மகளிர்க்கான நேத்தி கடன் செலுத்துபவர்கள்,388 முளைப்பாரி,கரகம்,மாவிளக்கு,எடுத்துக்கொண்டு ஊரை சுற்றிவந்து ஆடு பாலம் அருகில் உள்ள ஸ்ரீ சக்தி விநாயகரிடம் ஆசி பெற்றார்கள். மற்றும் விழா கமிட்டியாளர்கள், ஒன்று கூடி முளைப்பாரி, கரகம்,மாவிளக்கு அனைத்தையும் எடுத்து கொண்டு ஸ்ரீ பகவதி அம்மனை வணங்கி ஆசி பெற்று ஊர் பொது மக்கள் அனைவரும் சேர்ந்து முளைப் பாரி, கரகம் அனைத்தையும் வராக நதி ஆற்றங்கரையில் கலைத்தனர். ஸ்ரீபகவதி அம்மன் உற்சவ திருவிழாவை மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்த காவல்துறைக்கும், ஊர் பொதுமக்களுக்கும், விழா கமிட்டியாளர்கள் நன்றி தெரிவித்தார்கள்.



தேனி மாவட்டம் வருசநாடு ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் உள்ள கருப்பசாமி கோயில் தெருவில் அரசு புறம்போக்கு நிலத்தில் அனுமதியின்றி வைக்கப்பட்டிருந்த மரங்கள் குடிசைகள் ஆண்டிப்பட்டி துணை தாசில்தார் மகாலட்சுமி ஆர் ஐ இருதயராஜ் கிராம நிர்வாக அலுவலர் ரகு தலைமையில் வருசநாடு காவல் ஆய்வாளர் கண்மணி பாதுகாப்பில் பொதுமக்களுக்கும் வீடுகளுக்கும் இடையூறு ஏற்படாத வகையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டது



தேவாரத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம்யில் திடீர் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங் மருத்துவ பதிவேடுயை பார்வையிட்டார்.

# இளநிலை பொறியியல் பட்டயப்படிப்பு முடித்த இளைஞர்கள் தாட்கோ மூலம் வழங்கப்படும் புத்தாக்க பொறியாளர் பயிற்சி

சிவகங்கை மார்ச் 20

சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழக (தாட்கோ) நிறுவனமானது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகளை வழங்கி வருகிறது. அதனடிப்படையில், இளநிலை பொறியியல் பட்டயப்படிப்பு முடித்த இளைஞர்களுக்கு புத்தாக்க பொறியாளர் பயிற்சி (Innovation Fellowship program) வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியானது கணினி பொறியியல் நிபுணத்துவம் (System Engineering expertise) புதுமைத் திறன்களை வழங்குவதாகவும், மேலும் மின்னணு வடிவமைப்பு (Eelectronics System Design) மற்றும் உற்பத்தி துறை (Manufacturing), தானியங்கி தொழில்துறை (Industrial Automation), இயந்திரவியல் (Robotics) மற்றும் சேர்க்கை உற்பத்தி (Additive Manufacturing) போன்ற முக்கிய துறைகளில் பயிற்சி பெற, அறிவுத்திறன்களை உள்ளடக்கிய பயிற்சி வழங்கி அதிநவீன தொழில்நுட்ப ஸ்டார்ட் அப் (Technology Start-up) நிறுவனங்களில் நிபுணராக



உருவாக்குவதற்கான பாதையை வழிவகுப்பதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

மேலும், தாட்கோ மூலம் கடந்த ஆண்டு பயிற்சி பெற்ற 28 இளைஞர்கள் Thermofisher Scientific, Ashok Leyland, G Care India, TCS போன்ற தனியார் முன்னனி நிறுவனங்களில் Mechanical-R&D, Graduate Engineer Trainee மற்றும் R & D Business Development போன்ற பதவிகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

இப்பயிற்சியினை பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவர்கள் 2022, 2023 மற்றும் 2024 ஆம் கல்வியாண்டில் ஏதேனும் ஒரு இளநிலை பொறியியல் பட்டயப்படிப்பில் தேர்ச்சி பெற்று, 21 வயது முதல் 25 வயது வரை உள்ளவர்களாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

மேலும், பயிற்சிக்கான கால அளவு 18 வாரம் ஆகும். இப்பயிற்சி பெறுவதற்கென கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சி, சேலம், ஓசூர் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் தங்கும் வசதியுடன் பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியினை வெற்றிகரமாக முடிக்கும் பட்சத்தில் தொழில்நுட்ப ஸ்டார்ட் அப் (Technology Startups), மின்னனு உற்பத்தி நிறுவனம் (Electronic Manufacturing Company), Mobility and Automotive Company ஆகிய தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று மாதம் குறைந்தபட்சமாக ரூ.20,000/ ஊதியமாக பெறலாம். அதுமட்டுமன்றி, பயிற்சிக்கான கட்டணம் தாட்கோ ஏற்கும்.

எனவே, இப்பயிற்சியினை பெற விரும்பும் தகுதியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் www.tahdco.com என்ற இணையதளத்தின் வாயிலாக பதிவு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# ஊரப்பாக்கம் ஊராட்சியில் போலியான கையொப்பமிட்ட ஊராட்சி மன்ற தலைவர் - உள்ளிருப்பு போராட்டத்தில் கவுன்சிலர்கள்

ஊரப்பாக்கம் மார்ச் 20

செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கம் ஊராட்சி பஞ்சாயத்து தீர்மானத்தில் போலியாக துணை தலைவர் மற்றும் கவுன்சிலர்களின் கையொப்பமிட்ட ஊராட்சி மன்ற தலைவர்

போலி கையெழுத்து போட்ட தலைவர் மற்றும் நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளின் போக்கை கண்டித்து ஊரப்பாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் துணை தலைவர் ரேகா கார்த்திக் தலைமையில் கவுன்சிலர்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்

செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கம் ஊராட்சியில்

கடந்த நான்கு ஆண்டுகளாக எந்தவித பணிகளும் மேற்கொள்ளவில்லை எனவும் மாதாந்திர கூட்டம் நடைபெறவில்லை எனவும் போலியாக ஊராட்சி மன்ற தலைவர் பவானி கார்த்திக் போலி கையொப்பம் போட்டு மோசடியில் ஈடுபட்டு ஊழல் செய்து வருவதாகவும் இதுகுறித்து செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் ஏடி



பஞ்சாயத்து வட்டார வளர்ச்சி அலுவலரிடம் பலமுறை புகார் அளித்து இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என கோரி துணைத் தலைவர் ரேகா கார்த்திக் தலைமையில் கவுன்சிலர்கள் காலை முதல் இரவு முழுவதும் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக துணைத் தலைவர் மற்றும் கவுன்சில்களின் கையெழுத்தை போலியாக தலைவர் பவானி கார்த்திக் கையெழுத்து போட்டு தீர்மானம் நிறைவேற்றி பல லட்சம் ஊழல் செய்ததாக அவர்கள் குற்றச்சாட்டு முன் வைத்தனர்.

குறிப்பாக போலி கையெழுத்து போடப்பட்ட தீர்மானத்தை எடுத்துக் கொண்டு ஆதாரத்துடன் அதிகாரிகளிடம் புகார் அளித்ததால் அதிகாரிகள் உண்மைதான் என தெரிய வந்தது அடிப்படையில் தலைவர் காசோலையில் கையெழுத்து போடும் அதிகாரத்தை ரத்து செய்து இருப்பதாக கவுன்சிலர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கடந்த நான்கு ஆண்டுகளாக அடிப்படை வசதி கூட வாக்களித்த மக்களுக்கு செய்ய முடியவில்லை என வேதனை தெரிவித்தனர். மேலும் தங்களின் கையெழுத்தை போலியாக போட்டு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி பணம் சம்பாதித்து இருப்பதாகவும் தெரிவித்தனர்.

குறிப்பாக போலி கையெழுத்து போட்ட ஊராட்சி மன்ற தலைவர் மீது நடவடிக்கை உடனடியாக எடுக்க கோரி காலை 10 மணி முதல் தொடர்ந்து ஊராட்சி மன்ற அலுவலகத்தில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

# பழனி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு பழனி நகர அருந்ததியர் நலச்சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் இணைந்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



பழனி மார்ச்20

பழனி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு பழனி நகர அருந்ததியர் நலச்சங்கம் மற்றும் பல்வேறு அமைப்புகள் இணைந்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு பழனி நகர அருந்ததியர் நலச்சங்கம் மற்றும் பல்வேறு தோழமை அமைப்புகள் இணைந்து கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தாங்கள் வாழும் பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் மதுபான கூடத்தை அகற்ற வலியுறுத்தியும், தங்களுக்கான நிலங்களை பலரும் அபகரித்துள்ளதாகவும் மேலும் தங்களுக்காக பிரிட்டிஷார் காலத்தில் வழங்கப்பட்ட பொதுமடத்தினை சிலர் ஆக்கிரமிப்பு செய்து பட்டா பெற்று இருப்பதாகவும் அதனை ரத்து செய்து அருந்ததியர் மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கண்டன கோஷங்களை எழுப்பி, பதாகைகளை கையில் வைத்தவாறு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் தனியார் மதுபான கூடம் தொடர்ந்து செயல்படுவதால் அதிக அளவில் இளைஞர்கள் மதுவுக்கு அடிமையாக கூடிய சூழ்நிலை தாங்கள் வாழும் அருந்ததியர் குடியிருப்பு பகுதியில் இருப்பதாகவும் உடனடியாக தனியார் மதுபான கூடத்தை அகற்ற வேண்டும் என வலியுறுத்தினர்.

இந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தலைமை நாகராஜ். காளிமுத்து கோபால் மாரிமுத்து. சமூக நீதி கட்சி பன்னீர்செல்வம். உலக நம்பி தமிழ் இன்பன் தமிழ் புலிகள் கட்சி இரணியன் கல்யாணசுந்தரம் முகிலரசன். கணபதி என்ற திருவளவன். சுந்தரம் ஜெயசீலன் போர்க்கொடி அதிவளவன் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழ் புலிகள் கட்சி, இந்திய குடியரசு கட்சி, ஆதித்தமிழர் பேரவை, சமூக நீதிக் கட்சி, விடுதலை வேங்கைகள் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சியைச் சார்ந்த நிர்வாகிகளும், பெண்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# பெண் குழந்தைகள் பாதுகாப்பு என்பது ஒரு சமுதாயத்தின கடமை கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான்.

தென்காசி மார்ச் 20.

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலகம் மூலம் நடத்தப்பட்ட நகராட்சி அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு நகர மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் தலைமை தாங்கினார் நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன் முன்னிலை வகித்தார் சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கர் வரவேற்புரையாற்றினார் கூட்டத்தில் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர் நசீமாள் பெண் குழந்தை பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் பெண் குழந்தை பராமரிப்பு நிறுவன பிரதிநிதி காவல் நிலைய ஆய்வாளர் காளீஸ்வரி உதவி ஆய்வாளர் நரசிங்கம் சுகாதார ஆய்வாளர்கள் சிவா மாதவன் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர் பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து நகர்மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபிபூர் ரகுமான் கூறியதாவது தங்களது உரிமைகளை அறிந்துகொண்டு தங்கள் வாழ்வில் அதிகாரம் பெற விழிப்புணர்வு அவசியம் பெண் குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதன் மூலம் பெண் குழந்தைகள் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் குறித்து குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவோம் பெண் குழந்தைகள் மீதான வன்முறைக்கு எதிராக குரல்



எழுப்ப வேண்டும் பெண் குழந்தைகளுக்கு ஆதரவாக செயல்பட வேண்டும் பெண் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் சமூகத்தில் பாலின சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் கடைசியாக பெண் குழந்தைகள் பாதுகாப்பு என்பது ஒரு சமுதாயத்தின் கடமை நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பான சமத்துவமான ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என கூறினார்

மேலும்பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து நகராட்சி ஆணையர் ரவிச்சந்திரன் கூறியதாவது பெண் குழந்தைகள், நம் சமுதாயத்தின் எதிர்காலத்தின் தூண்களாக இருக்கிறார்கள். அவர்களது பாதுகாப்பு, கல்வி மற்றும் மேம்பாடு என்பது, ஒரு நாடும் சமுதாயமும் முன்னேற மிக முக்கியம். ஆனால் பல இடங்களில் பெண் குழந்தைகள் பல்வேறு விதமான அச்சுறுத்தல்களையும், துன்புறுத்தல்களையும் எதிர் கொள்கிறார்கள் இளவயதில் திருமணம், பாலியல் வன்கொடுமை, வேலைக்கு அனுப்பப்படுதல், போதிய கல்வி கிடைக்காமல் போதல் போன்ற பல பிரச்சனைகள் அவர்களைப் பாதிக்கின்றன.

பெண் குழந்தைகள் மீதான வன்முறைகள் வீட்டு வன்முறை, பாலியல் வன்கொடுமை, கடத்தல், வரதட்சணை கொடுமை போன்ற வன்முறைகள் பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களாகும். இவை அவர்களின் உடல் மற்றும் மனநலனை கடுமையாகப் பாதிக்கின்றன.

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பெண் குழந்தைகளுக்கு போதுமான கல்வி கிடைக்காமல் போவது, அவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்குகிறது.

வேலைவாய்ப்புகளிலும், சமூகத்திலும் அவர்கள் பலவீனமாக இருக்கிறார்கள். சமூகத்தில் பாகுபாடு: பெண் குழந்தைகள் சமூகத்தில் பல இடங்களில் பாகுபாட்டுக்கு ஆளாகிறார்கள். அவர்களது கருத்துக்களும், தேவைகளும் புறக் கணிக் கப்படுகின்றன.

விழிப்புணர்வு ஏன் அவசியம் எனில் பெண் குழந்தைகள் மீதான வன்முறைகளைத் தடுக்கவும், அவர்களின் உரிமைகளை நிலைநாட்டவும் விழிப்புணர்வு அவசியமாகிறது. சமூகத்தில் பாலின சமத்துவத்தை ஏற்படுத்தவும், பெண் குழந்தைகளுக்கு அதிகாரம் அளிக்கவும் விழிப்புணர்வு அவசியம். பெண் குழந்தைகள் தங்களது உரிமைகளை அறிந்துகொண்டு, தங்களது வாழ்வில் அதிகாரம் பெற விழிப்புணர்வு அவசியம்.

எப்படி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்? பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தலாம் எனக் கூறினார்.

## குன்னூரில் கதவைத் தட்டிய கரடி.. விரட்டிய தெரு நாயால் பரபரப்பு திருடன் நினைத்து உருட்டு கட்டையுடன் காத்திருந்த மக்கள்





குன்னூர்,மார்ச்20

மலை மாவட்டமான நீலகிரிக்கு சமவெளி பகுதியில் இருந்து வனவிலங்குகள் அதிக அளவில் முகாமிட்டு வருவதால் பொதுமக்கள் பெரும் சிரமம் அடைந்து வருகின்றனர்.இதில் குடியிருப்பு பகுதிகளுக்கு அவ்வப்போது வரும் காட்டெருமை, சிறுத்தை ,குரங்கு, கரடிகள் போன்றவை உணவு மற்றும் குடிநீர் தேடி வருகிறது.இதில் குடியிருப்புகளில் வீணாகும் உணவு கழிவுகளை ருசித்து பழகிய வனவிலங்குகள் தொடர்ந்து அதனை சாப்பிட வந்த வண்ணம் உள்ளது. இந்நிலையில் குன்னூர் டென்ட்ஹில் பகுதியில் கரடிகள் அவ்வப்போது இரவு நேரத்தில் வந்து அங்குள்ள பொருட்களை ருசித்தும் சூறையாடியும் சென்று வருவது வழக்கம், இந்நிலையில் நேற்று இந்தப் பகுதிக்கு வந்த கரடிகிருஷ்ணமூர்த்தி என்பவரின் வீட்டின் கதவை தட்டியுள்ளது. அப்போது அங்கிருந்த இவருடைய தாயார் ரமாதேவி பயத்தில் திருடர்கள் வந்துவிட்டார்கள் என்று நினைத்து உடனடியாக அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கு செல்போனில் தொடர்பு கொண்டு விவரத்தை சொல்லி உள்ளார். அவர்களும் உருட்டுக்கட்டைகளுடன்வந்து பார்த்தபோது அங்கு யாரும் இல்லை. இருப்பினும் தொடர்ந்து அதே இடத்தில் காத்திருந்தனர். பின்னர் அதிகாலை 4.30 மணி அளவில் முட்புதரில் பதுங்கி இருந்த கரடி வேகமாக சென்றது சிசிடிவி கேமராவில் தெரிந்துள்ளது. அப்போது அங்குள்ள தெரு நாய் கரடியை நீண்ட நேரம் பின் தொடர்ந்து துரத்தி இது எங்க ஏரிய உள்ள வராத என்ற சினிமா பாணியில் விரட்டி அடித்தது. இதனால் இப்பகுதி மக்கள் தூக்கம் இழந்து அவதியுற்று வருகின்றனர். நான்காவது முறையாக கரடி இப்பகுதிக்கு வந்து சென்றதால் வனத்துறையினரும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## நீலகிரியில் தயாரிப்பு -காலாவதி தேதி இல்லாமல் ஐஸ்கிரீம் குளிர் பானங்கள் விற்பனை




குன்னூர் ,மார்ச்20

நீலகிரி மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. பள்ளி மாணவர்கள் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் என அனைவரும் தாகம் தீர்க்கும் வகையிலும் குளிர்ச்சி பெறுவதற்காகவும் கடைகள் விற்பனை செய்யப்படக்கூடிய குளிர்பானங்கள் ஜூஸ் வகைகளை வாங்கி பயன்படுத்துகின்றனர். பள்ளிகள் மற்றும் சாலையோரக் கடைகளில் குளிர்பானங்கள் மற்றும் மாணவர்கள் குழந்தைகள் பயன்படுத்தும் வகையிலான சிப் அப் எனப்படும் ஜூஸ் வகைகளும் பாக்கெட்டுகளை அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இவை உரிய பாதுகாப்பு முறைகளுடன் உள்ளதா என்பதை மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது. குறிப்பாக மாவட்டத்தில் உள்ள பள்ளி கல்லூரிகள் முன்பாக சுத்தமான தண்ணீரில் உற்பத்தி செய்யப்படுகிறதா? அதில் கலக்கப்படும் ரசாயனங்கள் அனுமதிக்க பட்டவைகளா? எப்போது தயாரிக்கப்பட்டது. எங்கு தயாரிக்கபட்டது என்பதை அறிந்து கொள்ள இயலாத சூழ்நிலையாக உள்ளது. மேலும் பல்வேறு கடைகளில் இருந்து விற்பனை செய்யப்படும் இதுபோன்ற குளிர் பானங்களில் தயாரிப்பு தேதி,காலாவதி தேதி எதுவும் இல்லாமல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் கடைகளில் விற்பனை செய்யப்படும் நிறுவனத்தின் சிப் அப் குளிர் பானத்தை குடித்த குழந்தைகளுக்கு தொண்டை அரிப்பு மற்றும் உதடு அரிப்பு ஏற்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இது போன்று பல்வேறு பகுதிகளிலும் மாணவ மாணவிகள் வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்க, தாகம் தீர்க்க இது போன்ற குளிர்பானங்களை வாங்கி பயன்படுத்தும் போது உடல் நல பாதிப்புகள் ஏற்பட்டு வருகிறது. எனவே நீலகிரி மாவட்ட நிர்வாகம் மற்றும் உணவு பாதுகாப்பு மாவட்டம் முழுவதும் உள்ள கடைகளிலும் பாதுகாப்பற்ற வகையில் விற்பனை செய்யப்படக்கூடிய குளிர்பானங்கள் குறித்து உரிய ஆய்வுகள் நடத்தி தரமற்ற குளிர்பானங்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் விடுத்து உள்ளனர்.

## மானாமதுரை ஒருங்கிணைந்த நீதிமன்றத்தின் 2025-26 ஆம் ஆண்டுக்கான வழக்கறிஞர் சங்க நிர்வாகிகள் பதவி ஏற்றனர்



மானாமதுரை மார்ச் 20

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒருகிணைந்த நீதிமன்றத்தின் 202526 ஆம் ஆண்டுக்கான வழக்கறிஞர் சங்க தேர்தல் சமீபத்தில் நடந்து முடிந்த நிலையில், வழக்கறிஞர் சங்க தலைவராக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் வி.செல்வராஜ் சங்க தலைவராக பதவி ஏற்றுக் கொண்டார். சங்கத்தின் செயலாளராக வழக்கறிஞர் எம். கண்ணன், துணைத் தலைவராக வழக்கறிஞர் பி. மருது பாண்டியன், பொருளாளராக எம். கோபாலகிருஷ்ணன், இணைச் செயலாளராக வழக்கறிஞர் வி. அனு சூர்யா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் இந்நிகழ்வில் முன்னாள் நிர்வாகிகள், மூத்த வழக்கறிஞர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள் உள்ளிட்டோர் பதவி ஏற்பு விழாவில் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்




“உங்களைத் தேடி, உங்கள் ஊரில்” திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், ஏற்காடு ஊராட்சி ஒன்றியம், முண்டகம்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் குழந்தைகளின் கல்வித்திறன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், சேலம் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் அ.அபிநயா, துணை ஆட்சியர் (பயிற்சி) ஆர்.மாருதிபிரியா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சுமைப்பணி சங்கம் சிஐடியு மாவட்ட பொறுப்பாளர் மீது கொலை வெறி தாக்குதல் குற்றவாளிகளை கைது செய்ய சிஐடியு கண்டனம்



சிவகங்கை மார்ச் 20

சிவகங்கை மாவட்டத்தில் 80 மையங்களுக்கு மேல்தமிழ்நாடு நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்

விவசாயிகளின் உற்பத்தியை ஏற்றுதல் இறக்குதல் தூற்றுதல் சாக்கு தைத்தல்

பாதுகாத்தல் உள்ளிட்ட பல வேலைகளை செய்து வரும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்த சிற்பத்திற்கு பத்து ரூபாயை தொழிலாளர்களுக்கு பட்டு வாடாசெய்யும் பொறுப்பு ஜிழிசிஷிசி நிர்வாகத்தை சார்ந்ததாகும்.

அவ்வாறு இருக்கையில் சிவகங்கை மாவட்ட சுமை பணி தொழிலாளர் சங்கம் சிஐடியு மாவட்ட பொறுப்பாளர் அய்யம்பாடி ஞிறிசி சுமைப்பணி தொழிலாளர்கள் சிற்பத்திற்கு அரசு ஒதுக்கும் பத்து ரூபாய் தொழிலாளிக்கு வழங்கப்படுவதில்லை என்ற தகவல் வந்ததை தொடர்ந்து

சிஐடியு மாவட்ட தலைவர் தோழர் ஆர்வீரையா, சுமைப்பணி மாவட்ட பொறுப்பாளர் பி அய்யம்பாண்டி, சிஐடியு மாவட்ட குழு உறுப்பினர் தோழர் பி முருகானந்தம் ஆகியோர்கள் சிஐடியு சார்பில் கடந்த 13.3.2025 அன்று சிவகங்கை ஜிழிசிஷிசி ஸிவி அலுவலகத்தில் அரசு வழங்கும் பத்து ரூபாயை சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள் கிடைக்கவில்லை என தகவல்கள் வருகிறது அதை பரிசீலனை செய்யுங்கள் என்கிற கடிதத்தை கொடுத்து வந்தோம்

உடனேமண்டல மேலாளர் அவர்கள் திருப்புவனம் பூவந்தி ஞிறிசியில் விசாரித்தபோது அலுவலர்கள் விவசாயிகளிடம் 30 ரூபாய் வாங்குவதாகவும் சுமைப்பணி தொழிலாளர்களுக்கு பத்து ரூபாய் கொடுக்காததம் உண்மை என்பதை அறிந்ததாகவும் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததாகவும் செய்திகளில் பிரசுரமாகியுள்ளது

மேலாளரின் மேற்படி நடவடிக்கை துவக்கத்திலிருந்தே ஆய்வுக்கு உட்படுத்திநம்பகத்தன்மையை

பிரசுரித்திருக்கவேண்டும், 14/3/2025 இரவு சுமார் 10.30மணி அளவில் மேலபூவந்தி ஆனந்த், கீழ பூவந்தி வரதன் முனீஸ்வரன் ஆகியோர்கள் தலைமையில் பலர் டிராக்டரில் சென்று

அய்யம்பாண்டியை பார்த்து நெல் கொள்முதல் நிலையத்தை நாங்கள் தான் நடத்துகிறோம்

நீ எப்படி புகார் கொடுக்கலாம் என்ற ஆவேசத்தோடு சிபிஎம் மாவட்டத் தலைவர்களில் ஒருவரும் சுமைப்பணி சிஐடியு மாவட்ட பொறுப்பாளரும் சாதி மத பேதம் பார்க்காமல் பாதிக்கப்பட்டவர்களுக்காக அயராது பாடுபடும் எங்கள் தோழர் அய்யம்பாண்டியை கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளார்கள் இச்சம்பவத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

பூவந்தி காவல் நிலையத்தில் புகார் செய்து திருப்புவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் காவல்துறை உரிய நடவடிக்கை துவக்கி இருந்தாலும் சட்டப்படி முழுமையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுகிறோம் என சிஐடியூ சார்பில் மாவட்ட தலைவர் தோழர் ஆர்வீரையா கண்டனம் தெரிவித்துள்ளார்..

## விண்வெளியில் பல சாதனைகள் செய்து பூமியை வந்தடைந்த சுனிதா வில்லியம்ஸ்-பேரி வில்மோருக்கு பாராட்டு







காளையார் கோவில் மார்ச் 20

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டையில் விண்வெளியில் பல சாதனைகள் செய்து நம்பிக்கை நட்சத்திரமாக மின்னுகின்ற சுனிதா வில்லியம்ஸ் பேரி வில்மோருக்கு கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவ மாணவிகள் உற்சாகமாக வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்கள். அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி கூறும்போது ஸ்டார்லைனர் விண்கலத்தை சோதனை செய்வதற்காகத்தான் பேரி வில்மோரும் சுனிதா வில்லியம்ஸ் 2024 ஜூன் 5ஆம் தேதி எட்டு நாள் பயணமாக சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு கிளம்பினர். ஆனால் இந்த விண்கலத்தை இணைக்கும் போது சில கோளாறுகள் இருப்பது கண்டறியப்பட்டதில் அதில் மனிதர்கள் பயணிப்பது பாதுகாப்பற்றது என்று கருதியதால் ஸ்டார்லைனர் செப்டம்பர் 7 அன்று ஆளில்லாமல் பூமிக்கு திருப்பி அனுப்பப்பட்டது. தொடர்ந்து ஒன்பது மாதங்கள் விண்வெளியில் தங்கி 62 மணி 6 நிமிடங்கள் விண்வெளியில் நடந்து அதிக நேரம் நடந்த பெண்மணி என்ற சாதனையை சுனிதா வில்லியம்ஸ் எட்டினார். 59 வயதிலும் விண்வெளியில் பல சாதனைகள் செய்து நம்பிக்கை நட்சத்திரமாக மின்னுகின்ற இந்திய வம்சவழியான சுனிதா வில்லியம்ஸ் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து பூமியில் பாதுகாப்பாக நேற்று தரையிறங்கி இருப்பது அறிவியல் வளர்ச்சியின் மைல்கல் என்றார். இதைக் குறித்து ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கீழக்கோட்டை மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அவர்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மார்ச் மாதத்திற்கான விஞ்ஞான துளிரில் வெளிவந்த சுனிதா வில்லியமின் அட்டை படத்துடன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். தலைமை ஆசிரியை தெய்வானை பட்டதாரி ஆசிரியர் மீனாட்சி கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## தாம்பரத்தில் மிக பிரம்மாண்டமான நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்ச்சி




தாம்பரம் மார்ச் 20

மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக தமுமுக மனிதநேய மக்கள் கட்சி தலைவர், பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் எம்..எச். ஜவாஹிருல்லா எம்எல்ஏ, விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் வன்னி அரசு அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்

தமுமுக மனிதநேய மக்கள் கட்சி செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே .ஜாகிர் உசேன் அவர்கள் தொகுப்புரை ஆற்றினார்கள்.

தலைமைக் கழக பேச்சாளர் ஜெ.சலீம் கான், தமுமுக மாவட்ட செயலாளர் யு.பாருக் அகமது, மனித மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் எம்.அப்துல் ரஹீம், மாவட்ட பொருளாளர் எம். சபியுல்லா ஆகியோர் முன்னிலையில் வகித்தார்கள்.

தாம்பரம் மாநகராட்சி மேயர் மரியாதைக்குரிய கே.வசந்தகுமாரி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், செங்கல்பட்டு மாவட்ட அரசு காஜி பஜ்லுல் ஹக் தாவூதி, மாநில அமைப்பு செயலாளர் மாயவரம் ஜெ.அமீன், மாநில செயலாளர் சிவகாசி முஸ்தபா, மாநில அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் புழல். ஷேக், தலைமை பிரதிநிதி அச்சரப்பாக்கம் எஸ்.எம்.ஷாஜகான், தாம்பரம் ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் எம்.கே .நாகூர் கனி, விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் பொறியாளர். ப.சாமுவேல் எபிநேசர், மதிமுக மாவட்ட செயலாளர் மா.வை.மகேந்திரன், திமுக மாவட்ட கழகப்பிரதிநிதி குறிஞ்சி பா.சிவா, 50வது வார்டு திமுக வட்டச் செயலாளர் ஆர்.ஜீவன், திமுக மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர்.கிருத்திகா தேவி, மாவட்ட சிறுபான்மை பிரிவு துணைத் தலைவர் என்.ஷாஜகான், 26வது வார்டு மாமன்ற உறுப்பினர் புசிரா பானு நாசர் எம்சி, திமுக மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் எம்.கல்யாணி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட துணைச் செயலாளர் ஓகேன்.அப்துல் காதர், பி.சாகுல் ஹமீது, பம்மல் ஏ.முகமது யூனுஸ், எஸ்.கே.எஸ்.கபீர் கான், ஜமால், மன்சூர் அலிகான், மற்றும் தாம்பரம் மத்திய பகுதி நிர்வாகிகள், தாம்பரம் கிழக்கு பகுதி நிர்வாகிகள், தாம்பரம் மேற்கு பகுதி நிர்வாகிகள், ஜமாத்தார்கள் மற்றும் பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள்.

இறுதியாக தாம்பரம் மத்திய பகுதி தலைவர் எம்.ஜலாலுதீன் அவர்கள் நன்றி உரையாற்றினார்கள்

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161